# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 22 வியாழக்கிழமை 07.08.2025 கதிர் 278



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# புலம்பெயர் புலிகளால் மஹிந்தவுக்கு ஆபத்தாம்

## மீண்டும் பூச்சாண்டி காட்டுகின்றது மொட்டுக் கட்சி



கொழும்பு, ஓக. 07

"புலம்பெயர் புலிகளால் மஹிந்த ராஜபக்ஷ இலக்கு வைக்கப்பட்டுள்ளார். அவர்களின் வேண்டுகோளுக்கு அமையவே மஹிந்தவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அநுர அரசால் நீக்கப்படுகின்றன." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை இரத்துச் செய்வதற்கு அநுர அரசு தயாராகி வருகின்றது. இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் மற்றும் குரோத நோக்கு என்பவற்றின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சலுகைகள் தற்போதைய அரசால் இரத்துச் செய்யப்படவுள்ளன.

புலம்பெயர்புலிகளின்கோரிக்கையை நிறைவேற்றும் வகையில்தான் அரசு செயற்படுகின்றது. அரசின் இந்த முடிவால், எதிர்காலத்தில் போர் ஏற்பட்டால்கூட முதுகெலும்புடன் செயற்படக்கூடிய தலைவர் உருவாவதைத் தடுக்கும் நோக்கமும் இதன் பின்னணியில் உள்ளது." - என்றார்.

## ஊடகவியலாளர் குமணனை விசாரணைக்கு அழைத்தது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு!

முல்லைத்தீவு, ஓக. 07

ஊடகவியலாளர்க.குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்கு அழைத்துள்ளது.

ஊடகவியலாளர் குமணன் காணாமல்போனோரின் உறவுகளின் போராட்டங்கள், நில அபகரிப்பு மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி போன்ற செய்திகளைத் தொடர்ச்சியாகக் களத்தில் நின்று வெளியிட்டு வருபவர். இந்நிலையில், அவரைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணைக்காக அழைத்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் குமணனுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில், வாக்குமூலமொன்றைப் பதிவு செய்வதற்காக ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு முல்லைத்தீவு, அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயங்கரவாதத்தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.



## குடும்பஸ்தர் மாயம்



மஸ்கெலியா, ஓக. 07

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்லோ தோட்டத்தைச் சேர்ந்த 7

## வவுனியாவில் யானை தாக்கி ஆண் ஒருவர் பரிதாப மரணம்



வவுனியா, ஓக. 07

வவுனியா, பெரியதம்பனை பகுதியில் யானை தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் 7

## மஹிந்தவின் பாதுகாப்பு குறைக்கப்பட வேண்டும்

### பொன்சேகா வலியுறுத்து

கொழும்பு, ஓக. 07

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷவுக்குத் தற்போது வழங்கப்பட்டிருக்கும் 60 பேர் கொண்ட பாதுகாப்பு ஏற்பாடானது மிக அதிகம். அவரின் பாதுகாப்புப் படையணியை 30 பேரைக் கொண்டதாகக் 7



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மின்சார சட்டம் வந்திருந்தால் ஊழியர்களுக்கு ஷாக் அடித்திருக்கும்



கொழும்பு, ஓக 07

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த மின்சார சட்டத்தை செயற்படுத்தினால் மின்சார சபையின் 23,000 சேவையாளர்களின் எண்ணிக கையை 12 000ஆக குறைக்கும் சூழலே காணப்பட்டது. புதிய சட்டமூலத்தில் மின்சார சபை யின் சகல ஊழியர்களின் தொழில் உரிமைகள் பாது காக்கப்படும் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர்பேசுகையில், மின்சாரத்துறை தொடர்பில் கடந்த காலங்களில் கொண்டு வந்த சட்டங்களுக்கு ஜே .வி. பி. எதிர்ப்பு தெரிவித்தது என்று கூறுவதனை ஏற்க முடியாது. 2002ஆம் ஆண்டுமற்றும்2024ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மின்சாரத்துறை தொடர்பான சட்ட மூலங்களை எதிர்த்ததால் தான் மின்சார சபையின் தனியுரிமை பாது காக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டு அப்போதைய மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜே சேகர இலங்கை மின்சார சபையை 12 நிறுவனங்களாகக் கூறுபடுத்தும் வகையில், சட்டமூலத்தை கொண்டு வந்தார் .இதற்கு நாங்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம். இருப்பினும், அச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த மின்சார சட்டத்தைச் செயற்படுத்தினால் இலங்கை மின்சார சபையின் தனியுரிமை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பல்வேறு பகுதியாகக் கூறுபடுத்தப்படும். இதனைத் தடுக்கும் வகையில் தான் புதிய திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். (ஐ)

# தமிழின அழிப்புக்கான ஆயுதத்தை நீக்கவும்



கொழும்பு, ஓக 07

தமிழின அழிப்புக்குப்பிரதான ஆயுதமாகவிருந்த பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்துக்கு மாற்றாக, பிறிதொரு சட்டம் இயற்றப்படக் கூடாது என தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட எம்.பி. கவீந்திரன் கோடீஸ்வரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

மேலும், பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். கடந்த அரசாங்கங்கள் அனைத்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அச்சட்டத்தையே செயற்படுத்தின. இதனால் பாரிய விளைவுகள் மக்களுக்கு ஏற்பட்டன .

கடந்த அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்து அதற்கு பதிலாகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சித்த போது தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அதற்கு அப்போது கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தார். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாறாக பிறிதொரு சட்டத்தை உருவாக்கக் கூடாது என்று குறிப்பிட்டார் இந்த நிலைப்பாட்டில் தான் நாங்களும் இருக்கின்றோம்.

இந்த நாடு பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பில் சீரழிவதற்குப் பயங்கரவாத தடைச்சட்டம் பிரதான காரணமாக அமைந்தது. ஜே வி.பியின் தலைவர் ரோஹன விஜேவீரவும், அதன் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாகவே கொல்லப்பட்டார்கள். ஆகவே, ஜே.வி.பியின். இந்நாள் தலைவரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்த சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்.

அதேவேளை, அந்தச் சட்டத்துக்கு மாற்றாக பிறிதொரு சட்டம் இயற்றப்படக் கூடாது என்றார். (ஐ)

# இரண்டாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவு

இந்த வருடத்திற்கான பாடசாலை இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடைவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளின் முதல் கட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டம் நவம்பர் 17 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.



# மோசடி உறுதியானால் விசாரணை நடக்கும்



கொழும்பு, ஓக 07

எமது அரசாங்கத்தில்யாராவது ஊழல்மோசடியுடன் தொடர்புபட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று பிரதமரிடமான கேள்வி நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சமிந்த விஜேசிறி எம்.பி. தனது கேள்வியின்போது,

கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி, சீனி மோசடி மற்றும் தேங்காய் எண்ணெய் மோசடி தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தபோதும் இதுவரை அதுதொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேநேரம், அரசாங்கம் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதுபோன்று, இந்த அரசாங்கத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் உண்மையாக விசாரணை மேற்கொள்ளுமா?

குறிப்பாக, கடந்த காலத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடிக்குச் சமமாக இந்த அரசாங்கத்தில் உப்பு மோசடி இடம்பெற்றுள்ளது. அதேபோன்று சீனி மோசடிக்குச் சமமாகக் கொள்கலன் விடுவித்த மோசடி இடம்பெற்றுள்ளது. எனவே இந்த மோசடிகள் தொடர்பிலும் அரசாங்கம் முறையான விசாரணை மேற்கொள்ளுமா? என கேட்டார்

இதற்கு பிரதமர் பதிலளிக்கையிலேயே எமது அரசாங்கம் ஊழல் மோசடிகள் தொடர்பில் உண்மையாகவே விசாரணைகளை நடத்தி, குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. அவ்வாறு இல்லாமல் இதன்மூலம் அரசாங்கத்துக்கு கௌரவத்தை அதிகரித்துக்கொள்வதற்காக விசாரணைகள் மேற்கொள்வதில்லை என்றார். (ஐ)

## படுகொலை வழக்குகளின் தரவுகள் கிடையாது



கொழும்பு, ஓக 07

2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படு கொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் எவ்வித தரவுகளும் கிடையாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. முஜிபுர் ரஹ்மான், மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை? அவற்றில் இன்றளவில் நிறைவடைந்துள்ள வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை?, அவ்வழக்குகள் யாவை/ வழக்குகளில் சட்டத்துறை தலைமையதிபதியினால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பது தொடர்பில் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் எவ்வித தரவுகளும் கிடையாது. அதனால் முன்வைக்கப்பட்ட இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் போது அரசியல்வாதிகள், அரச அலுவலர்கள் என்று வகைப்படுத்தப்படுவதில்லை. அது தவறானது. பொதுவான நிரல்படுத்தலே குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன என்றார். (ஐ)

## தமிழ் எம்.பிக்களை சந்திக்கும் ஜனாதிபதி அநுர



கொழும்பு, ஓக 07

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரின் எழுத்து மூலமான அவசர வேண்டுகோளின் பெயரில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா இன்று அவசரமாகச் சந்திக்கவுள்ளதாக தெரியவருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படும் காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பில் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதம் தொடர்பில் ஆராயவே இந்த அவசர சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று 2 மணிக்கு நடைபெறவுள்ள இந்த அவசர சந்திப்புக்குக் கடிதத்தில் ஒப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கடித்ததில் ஒப்பமிடாத வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்கு மன்னார் காற்றாலையுடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)




## மன்னாரில் கனிய மணல் அகழ்வு திருமலையில் போராட்டம்

*மன்னார், ஓக 07*

*மன்னார் நகரில் இடம்பெறும் இல்மனைட் கனிய மணல் அகழ்விற்கு எதிராக திருகோணமலையில் நேற்று (06) போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மக்கள் எழுச்சி “கருநிலம்” போராட்டத்திற்கு தார்மீக ஆதரவையும், வட,கிழக்கு பிரதேசங்களில் நிகழும் திட்டமிடப்பட்ட வளச்சுரண்டலுக்கு எதிரான எதிர்ப்பையும், சூழலியல் பாதுகாப்பையும் வெளிப்படுத்தும் நோக்குடன் திருகோணமலை பிரதான கடற்கரையில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*“தளம்சூழலியல்குழுமம்” ஒருங்கிணைப்பில்பல்வேறு சமூக, சூழலியல்செயற்பாட்டாளர்களின் பங்குபற்றுதலுடன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.*

*கவனயீர்ப்பில் ஈடுபட்டோர் பல்வேறுபட்ட கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்பை முன்னெடுத்தனர். (ஐ)*

## 1,408 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்க சுகாதார அமைச்சு முடிவு



கொழும்பு, ஓக 07

ஆரம்ப தர மருத்துவ அதிகாரிகளாக பயிற்சிகளை நிறைவுசெய்த 1,408 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்க சுகாதார அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பயிற்சியை முடித்த, உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்த மருத்துவர்கள், அமைச்சின் மனிதவள முகாமைத்துவ மற்றும் தகவல் அமைப்பு ஊடாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் எச். எம். அர்ஜ/ன திலகரத்ன அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## கிரிபத்கொட நகரத்தில் திடீர் சுற்றிவளைப்பு – இருவர் கைது

கிரிபத்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிபத்கொட நகரத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த இரு வேறு சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். கைதான முதலாவது சந்தேகநபரிடம் இருந்து 101 கிராம் 180 மில்லிகிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இந்நிலையில், இரண்டாவது சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 427 கிராம் 530 மில்லிகிராம் குஷ் போதைப்பொருள், 1 கிலோ 141 கிராம் ஹேஷ் போதைப்பொருள் மற்றும் 1,250,000 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

# விவசாயிகள் நலனை பாதுகாக்க நான் அதிக விலை கொடுக்க தயார்: பிரதமர் மோடி



இந்தியாவை பொறுத்தவரை, இந்திய விவசாயிகளின் நலனுக்கே முதன்மையான முன்னுரிமை. விவசாயிகள், மீனவர்கள், பால் விவசாயிகளின் நலன்களில் இந்தியா ஒருபோதும் சமரசம் செய்யாது. விவசாயிகள் நலனை பாதுகாக்க நான் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும், அதற்கு தயாராக இருக்கிறேன் என பிதமர் மோடி கூறியுள்ளார். அமெரிக்க பால் மற்றும் வேளாண் பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதியளிப்பதில்லை என்பதில் உறுதியாக இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (ஐ)

## வரதட்சணை கொடுமையால் இளம்பெண் தற்கொலை: கணவர் உட்பட 3 பேர் கைது



திருப்பூர்: திருப்பூரில் வரதட்சணை கொடுமையால் பிரீத்தி என்பவர் தற்கொலை செய்த வழக்கில் கணவர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருப்பூர் – தாராபுரம்சாலை பிரண்ட்ஸ் கார்டனை சேர்ந்தவர் குப்புசாமி. சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். இவரது மனைவி சுகந்தி. இவர்களது மகள் பிரீத்தி (26). ஐடி ஊழியரான இவருக்கும், ஈரோடு மாவட்டம் வீரப்பன்சத்திரத்தை சேர்ந்த சதீஷ்வர் (29) என்பவருக்கும் கடந்த ஆண்டு செப்டம்பர் 15ம் தேதி திருமணம் நடந்தது. திருமணத்தின்போது பிரீத்தி குடும்பத்தின் சார்பில் 120 சவரன் நகை, ரூ.25 லட்சம், கார் உள்ளிட்டவை கணவர் வீட்டாருக்கு வரதட்சணையாக தந்துள்ளனர்.

இந்த நிலையில் பிரீத்தியின் பூர்வீகச் சொத்து விற்பனையில் வந்த ரூ.50 லட்சத்தை கேட்டு கணவர் குடும்பத்தினர் அவரை கொடுமைப்படுத்தியதாக கூறப்படுகிறது. இதனால் கடந்த ஒரு மாதமாக திருப்பூரில் உள்ள தாய் வீட்டில் மன உளைச்சலில் இருந்த பிரீத்தி நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். பிரீத்தியின் உடல் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உடற்கூராய்வுக்காக அனுப்பப்பட்டது. இது தொடர்பாக உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது பெண்ணின் பெற்றோர் போலீசில் புகார் அளித்துள்ளனர். புகாரின் பேரில் நல்லூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். திருமணமாகி 10 மாதங்களில் இளம் பெண் தற்கொலை செய்து கொண்டிருப்பதால் ஆர்டிஓ விசாரணையும் தொடங்கப்பட்டது.

இதையடுத்து உடற்கூராய்வு முடிந்து உடலை உறவினர்களிடம் ஒப்படைக்கும் நேரத்தில், பிரீத்தியின் உறவினர்கள் திருப்பூர் மாநகர காவல் ஆணையர் ராஜேந்திரனை முற்றுகையிட்டு, சதீஸ்வர், அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி பிரீத்தியின் உறவினர்கள் உடலைப் பெற மறுத்துள்ளனர். இந்நிலையில், பிரீத்தியின் கணவர் சதீஸ்வர், மாமியார் உமா, மாமனார் விஜயகுமார் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். 3 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், பிரீத்தியின் உடலை அவரது பெற்றோர் பெற்றுக் கொண்டனர். திருப்பூர் மாவட்டத்தில் ரிதன்யா என்ற பெண் வரதட்சணை கொடுமை தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தமிழ்நாட்டையே உலுக்கியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெல்லியை தொடர்ந்து சென்னை மெட்ரோ டிக்கெட்டுகள் ஊபர் செயலி மூலம் விற்பனை




ஊபர் செயலியிலும் இனி சென்னை மெட்ரோ ரயில் டிக்கெட்டுகளை பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. **CMRL** பயணிகள் பாதுகாப்பாகவும், விரைவாகவும், ஓரளவுக்கு குறைந்த விலையிலும் பொது போக்குவரத்தில் பயணிப்பதற்கு பல சேவைகளை வழங்கி வருகிறது. குறிப்பாக, டிக்கெட் எடுக்கும் செயல்முறையையும் **CMRL** பல விதங்களில் எளிதாக்கி உள்ளது. கவுண்டரில் டிக்கெட் எடுப்பதை காட்டிலும் **CMRL** மற்றும் **honepe** செயலிகள் மூலம் டிக்கெட் எடுத்தால் 20ூ தள்ளுபடி வழங்கி வருகிறது. இதனால் நீங்கள் கூட்டத்தில் நின்று டிக்கெட் எடுக்கவும் தேவையில்லை.

இந்நிலையில், ஓபன் நெட்வொர்க் ஃபார் டிஜிட்டல் காமர்ஸ் **(ONDC)** என்ற நிறுவனம், இந்த நிலையில் ஊபர் செயலியிலும் இனி சென்னை மெட்ரோ ரெயில் டிக்கெட்டுகளை பெறலாம் என இன்று ஆகஸ்ட் .7ம் தேதி அறிவித்துள்ளது. ஊபர் செயலி மூலம் இன்று முதல் ஆகஸ்ட் 31 வரை 50 சதவீதம் சலுகை விலையில் மெட்ரோ டிக்கெட்டை பெறலாம் என்று அறிவிக்கப்பட்டது. **(QR - CodeI)** க்கியூஆர் கோர்டை பயன்படுத்தி மெட்ரோ ரெயில் டிக்கெட்டை பெறலாம். அதுமட்டுமின்றி நிகழ்நேர போக்குவரத்துத் தகவல்களையும் பெற முடியும்.

மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு செல்லவும், திரும்பவும் பயணக்கட்டணத்திலும் 50சதவீதம் சலுகை அறிவித்துள்ளது. ஆட்டோ, கார், டூ வீலர் முன்பதிவு செய்யும் ஊபர் செயலிலேயே மெட்ரோ ரெயில் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது பொதுமக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது. டெல்லிக்கு அடுத்து ஊபர் செயலி மூலம் மெட்ரோ டிக்கெட் வசதியை பெறும் 2வது நகரமாக சென்னை திகழ்கிறது. (ஐ)

## ஜம்மு காஷ்மீரில் பள்ளத்தாக்கில் ராணுவ வாகனம் விழுந்ததில் சிஆர்பிஎஃப் வீரர்கள் 3 பேர் பலி



ஜம்மு காஷ்மீரில் பள்ளத்தாக்கில் ராணுவ வாகனம் விழுந்ததில் சிஆர்பிஎஃப் வீரர்கள் 3 பேர் மரணமடைந்தனர். மலைப்பாதையில் சென்ற ராணுவ வீரர்களின் வாகனம், பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியுள்ளது .(ஐ)

# மனிதநேயம்

மனிதன் - இது வெறும் வார்த்தை அல்ல. இயற்கையின் உச்சகட்ட படைப்பு. பல கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சியின் விளைவால் இயற்கைக்குக் கிடைத்த மாபெரும்பரிசு மனிதன் ஆவான். வரம்பிலா வலிமை பெற்ற மனிதன் மனிதநேயம் எனும் மகுடத்தை சூடினால் மட்டுமே வைரமாய் மிளிர்கிறான்.



மனிதநேயம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது நம்மில் பலரும் இதுவரை நேரில் கூட கண்டிராத அன்னை தெரசாவும் நெல்சன் மண்டேலாவும் ஹெலன் கெல்லரும் போன்ற சான்றோர்கள் தான். மனிதநேயம் என்பது என்ன இவர்களின் கையடக்கப் பொருளா? பிறகு ஏன் இவர்கள் பளிச்சென்ற உதாரணமாகத் தோன்றவேண்டும். ஏனெனில் இவர்கள் “தனக்குப் போகத் தான் தானமும் தருமமும்” என்ற தகைமையைத் தாண்டி தன் வாழ்வை முழுவதுமாக சமூகப் பணிகளுக்காக அர்பணித்துக் கொண்டது தான். நாம் யாரும் அவ்வளவு உயரத்திற்குக் கூட செல்ல வேண்டியதில்லை. நம் கண் முன்னே நடக்கும் அன்றாட நிகழ்வுகளில் நம் உதவி தேவைப்படுவோருக்கு நம்மால் இயன்ற அளவு அதனைச் செய்யலாமே!

வளர்ந்து வரும் மனிதநேயம்:

மனிதநேயம் என்பது மனிதர் மனிதர் மேல் மட்டுமே கொண்டுள்ள நேயம் என்றால் அந்த வகையில் நாம் இன்று அதிக முன்னேற்றம் அடைந்துவிட்டோம் என்பதே உண்மை. முன்னாட்களில் எல்லாம் தன் உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களுடன் மட்டுமே கொண்டாடி வந்த தங்கள் பிறந்தநாள் விழாக்களை, இன்று நடுத்தர குடும்பத்து மக்கள் கூட ஆதரவற்றோர் விடுதிகளில் உள்ள குழந்தைகளோடு கொண்டாடவே விழைகிறார்கள். ஆனால் மனிதநேயம் என்பது மனிதன் மனிதன் மேல் மட்டும் கொள்ளும் நேயம் என்றல்லாமல் சற்றே விரிந்த பார்வையோடு இயற்கையின் மாபெரும் படைப்பான மனிதன் தன்னைப் படைத்த இயற்கை முதல் தான் படைத்த விஞ்ஞானம் ஈறாக அனைத்தினிடமும் காட்டுவதே ஆகும் என்பதை உணர வேண்டும். இவ்வாறு நோக்குங்கால் மனித நேயத்தை பல கூறுகளாகக் காணலாம். அவற்றுள் இன்றைய சூழ்நிலையைப் பொருத்தமட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பனவற்றை முன்வைபோமேயனால் அவை,

இயற்கையின் பால் மனிதன் கொள்ளும் மனிதநேயம்

அரசு தன் மக்களின் பால் காட்டும் மனிதநேயம்

தனி மனிதன் மற்றொரு மனிதனின் பால் கொள்ளும் நேயம்

இயற்கையின் பால் மனிதன் கொள்ளும் மனிதநேயம்:

மனிதன் என்பவன் இயற்கை தாயின் படைப்புகளின் உச்ச வரம்பு. அவன் இயற்கை தன்னை காப்பதற்காக பெற்ற தலைமகன். பெற்ற தாயிடமே நேயம் பாராட்டாத இன்றைய தலைமுறையினருக்கு இயற்கை தாயைப் பற்றி என்ன கவலை இருக்க முடியும்? விஞ்ஞான வளர்ச்சியால் நாம் வலது கையில் அலைபேசியும் இடது கையில் லேப்டாப்புமாகத் நமக்கு நாமே கலியுக கல்கி அவதாரமாகத் தோன்றுகிறோம். பாட புத்தகம் எங்கோ மூலையில் கிடக்க மூளையை ஈர்க்கிறது முகபுத்தகம் (குடீ). கதிர்வீசுகளால் ஏற்படும் பாதிப்புகளை அறிந்தும் சொகுசைக் கண்டு பழகிவிட்ட நமக்கு செல் பேசியை கீழே வைக்க மனம் வருவதில்லை. வீட்டுக்கு வீடு நறை -கை கனேக்சென். தொழில் போட்டிக்காக நிறுவனங்கள் இலவச சிம் கார்டு கொடுப்பதும் அதிலே காசும் போட்டு கொடுப்பதும், இலவசம் என்றால் இரண்டாக கொடு என்று முந்திச் சென்று வாங்கும் மக்களும், 24 மணி நேரமும் பேசணும் அதுவும் ஒசுலே பேசணும் என்ற அவர்களின் கனவு நிறைவேறிவிட்டதாக நினைக்கும் மக்கள், இது தனக்கு தானே தேடிக்கொள்ளும் அழிவு என்பதை நினைக்கத் தவறியதே வேதனைக்கு உள்ளாக்குகிறது. கதிர்வீசுகளால் ஏற்படும் அபாயங்களை அறிந்தும் நாம் ஏன் தடுக்க முடியாவிடினும் குறைக்க முற்படவில்லை? சரி அவற்றால் ஏற்படும் ஆதாயங்களை அடைகிறோம், எனவே அபாயங்களுக்கும் உள்ளகிறோம். பாவம் உலகில் நம்மோடு பிறந்த நம்மை போன்றே வாழ்வதற்கான அனைத்து உரிமைகைளும் பெற்ற பிற விலங்குகளும் பறவைகளும் மரங்களும் எந்த பாவத்திற்காக இந்த பழிகளை சுமக்க வேண்டும்? இதற்கு இணையான இன்னொரு வளர்ச்சி பிளாஸ்டிக், பொம்மையில் தொடங்கி பை எனும் பேயாகி இன்று அரிசி வரை முன்னேறிவிட்டது. நெஞ்சை நெகிழ வைக்கும் நெகிழியின் வளர்ச்சி. பாதை சீரமைப்பு என்று பரவலாக தார் ரோடும் சிமெண்ட் சாலைகளும் அமைத்து கொண்டோம். அது சரி. எஞ்சிய பகுதியிலும் பிளாஸ்டிக் குப்பையை பரப்பி பூமித் தாயின் தாகம் தணிக்க தவறி அவளை மூர்ச்சை ஆக்கிவிட்டோம். விரைவில் அவள் மூச்சையும் அடக்கி விடுவோம். என்னே நமது அறியாமையின் முன்னேற்றம். அடடா அதிவேகம்! காலகாலமாய் காய்த்து கொண்டிருந்த உயர் பனைமரங்கள் பாவம் எந்த வேண்டுதலுக்காக மொட்டை அடித்துக் கொண்டதோ தெரியவில்லை? எல்லாவற்றிகும் மேலாக நம் பெட்ரோல் டீசல் வாகனங்கள் செய்யும் கொடுமைகள் சொல்லி மாளாது. முடிந்த வரை நடந்து செல்வதும், சிறுது தூரமானால் மிதிவண்டியில் செல்வதும், இயன்ற வரை பொது போக்குவரத்தை பயன்படுத்துவதும் கூட மனிதன் இயற்கையிடம் காட்டும் மாபெரும் நேயம் தான்.



வடக்கில் பனி மழை கொட்டுவதும் ஆற்று வெள்ளத்தில் உயிர்கள் மடிவதும், தெற்கில் வறட்சியால் பசியால் நீர் ஆதாரமின்றி உயிர்கள் மடிவதும் ஒரே இந்தியாவில் தான் நிகழ்கிறது. அப்துல் கலாம் அவர்களின் கனவும், ஊ .சு . காமராஜ் (பொறியாளர்) அவர்களின் திட்டமுமான , அதிதிறன் நீர்வழிப் பாதையை உருவாக்குவதன் மூலம் மக்களின், மன்னிக்கவும், உரியினங்களின் வாழ்வாதாரம் காக்கப்படும். ஐயோ குடிபழக்கம் தவறானது என்று, என்றோ ஒரு நாள் வீட்டிற்குத் தெரியாமல் மது அருந்திவிட்டு வாசல் புகுந்தால் அம்மா வசை பாடுவாள் என்றஞ்சி கொள்ளை வழியே உள்ளே புகுந்து வாசம் வெளிவராமல் குப்புறப் படுத்துத் தூங்கிய காலம் போய், வருவாயின் பாதியை, பாதை தெரியாமல் தள்ளாடும் அளவிற்கு போதையை ஏற்றிக் கொண்டு, ஏனப்பா குடித்தாயா என்று அதட்டிக் கேட்டால், அம்மாவை மிரட்டிச் சென்று மல்லாந்து கிடக்கிறான் இருபது வயது நிரம்பாத இளங்குடிமகன். இந்தியாவை உயர்த்துவான் என கனவுகள் காணப்பட்டுள்ள இளம் குடிமகன். தலைமுறை மாற்றம் இப்படி ஒரு தள்ளாட்டத்தையும் நம்முன் வைத்துள்ளது. மாற்றம் அல்ல இது, அவனுக்கு பின்னாளில் கிடைக்கும் ஏமாற்றம். தவறு என்று அஞ்சப்பட்ட ஒரு நிகழ்வு தலைவிரித்து ஆடுகிறது என்றால், தட்டிக் கேட்கும் இடத்தில உள்ள அதிகாரிகளும், அரசும், தம் மக்கள் மேல் காட்ட வேண்டிய மனிதநேயத்தை மறந்து போனதாகத் தானே அர்த்தம். “எரிவதை வெளியே இழுத்தால் கொதிப்பது தானே அடங்கிவிடும்” என்ற நம் ஆன்றோர்களின் பழமொழிக்கிணங்க தயாரிப்பை தடுத்து நிறுத்த வேண்டிய அதிகாரம் பெற்றோர், அதன் அவசியத்தை உணர்ந்தும் அவசரபடாமல் ஏனோ இவ்வளவு காலம் காத்திருகிறார்கள்?! இதற்கு முன் உதாரணமாக டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி தன் மக்கள் மேல் கொண்ட நேயம் தான் விபச்சாரம் விரிவடைந்திருந்த நாட்களிலும் தேவதாசிகள் ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்ற அடிகோலியது.

இந்த உலகம் பல உயிர்களின் தோட்டம். மனித பூக்கள் அதில் ஏராளம். பார்த்து ரசிப்பது ஒரு இனம். பறித்து சூடுவது ஒரு இனம். மலரை பார்பதற்கு உரிமம் தேவையில்லை. பறிப்பதற்கு அந்தச் செடியின் சொந்தக் காரராய், அதன் பராமரிப்பாலராய், பாதுகாவலராய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. இல்லாவிட்டால் அதன் பெயர் திருட்டு என்றாகிறது. மாற்றான் மனைவிக்கு மல்லிகை சூடி தன் மஞ்சத்தில் ஆழ்த்தும் ஆற்றல் படைத்த ஆண்களும், அதுத்த வீட்டு ஆணை அழகன் என்று வியந்து தன் அந்தரங்க அன்பைப் பகிரும் பண்பாடு மறந்த பெண்களும், பலவந்தவமாக பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகும் சிறு மொட்டுகளும் இதே தோட்டத்தில் தான் உள்ளன. குடும்பம்- ஓர் அழகான அமைப்பு. நம்மோடு முடிவதில்லை உலகம். தலைமுறைகள் தொடரும். அவற்றைப் பசுமையாக தழையச் செய்வது நம் கடமை. நம் குழந்தைகளே நாளைய சமூகம். அவர்களுக்கு நாம் சிறந்த உதாரணமாக இருக்க வேண்டும். மற்றவர் குடும்பத்தை மாசில்லாத மனதோடு பார்ப்பது கூடு மனிதநேயம் தான்.

மனிதநேயத்தை இவ்வாறு பட்டியல்போட்டுக்கொண்டே போனால் பேனாவும் தீர்ந்துவிடும். பேசும் வார்த்தைகளும் முடிந்துவிடும். முடிவில் நம் சமூகம் விடிந்ததா என்பதே கேள்வி. முடியும் என்றெண்ணியதால் தான், விண்ணை முட்டி நிற்கிறது பல துறைகளில் நாம் கண்ட வளர்ச்சி. அதே மனபோக்குடன் ஏன் நம் சொந்த வாழ்விலும் சுத்தமான மனதோடும், மாற்று குறையாத நேயத்தோடும் வாழ முடியாது!

**இயற்கையின் பால் மனிதன் கொள்ளும் மனிதநேயம்: மனிதன் என்பவன் இயற்கை தாயின் படைப்புகளின் உச்ச வரம்பு. அவன் இயற்கை தன்னை காப்பதற்காக பெற்ற தலைமகன். பெற்ற தாயிடமே நேயம் பாராட்டாத இன்றைய தலைமுறையினருக்கு இயற்கை தாயைப் பற்றி என்ன கவலை இருக்க முடியும்? விஞ்ஞான வளர்ச்சியால் நாம் வலது கையில் அலைபேசியும் இடது கையில் லேப்டாப்புமாகத் நமக்கு நாமே கலியுக கல்கி அவதாரமாகத் தோன்றுகிறோம். பாட புத்தகம் எங்கோ மூலையில் கிடக்க மூளையை ஈர்க்கிறது**

# ஹெலிகாப்டர் விபத்தில் அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 8 பேர் உயிரிழப்பு: தேசிய துக்க தினமாக அறிவித்தது கானா அரசு




கானா நாட்டில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் அமைச்சர்கள் உள்பட 8 பேர் உயிரிழந்தது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்று கானா. இங்கு, தலைநகர் அக்ராவில் இருந்து அஷாந்தி பிராந்தியத்தில் உள்ள தங்க சுரங்க பகுதியான ஒபுவாசிக்கு நேற்று காலை 9.00 மணியளவில் ராணுவ ஹெலிகாப்டர் ஒன்று சென்றது.

அதில் பாதுகாப்புத்துறை அமைச்சர் எட்வார்டு ஓமானே பொவாமா, சுற்றுச்சூழல் அமைச்சர் அல்ஹாஜி முர்தாலா முகமது உள்ளிட்ட 8 அதிகாரிகள் பயணித்துள்ளனர். இந்த ராணுவ ஹெலிகாப்டர் புறப்பட்ட சில நிமிடங்களில், அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஹெலிகாப்டர் கட்டுப்பாட்டை இழந்து சிறிது நேரத்தில் அங்குள்ள வனப்பகுதியில் அந்த ஹெலிகாப்டர் கீழே விழுந்து நொறுங்கி தீப்பிடித்து எரிந்தது. சிறிது சிரமத்திற்கு பிறகு விபத்து பகுதியை கண்டுபிடித்து சென்ற ராணுவத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். இருப்பினும் ஹெலிகாப்டர் விபத்தில், அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் எட்வார்டு ஓமானே பொவாமா, சுற்றுச்சூழல் அமைச்சர் அல்ஹாஜி முர்தாலா, அதிகாரிகள் உள்பட 8பேரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. விபத்து தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டதோடு, தேசிய துக்க தினமாகவும் கானா அரசு அறிவித்தது. (ஐ)


## சிக்குன்குனியா பிடியில் சிக்கி தவிக்கும் சீனா: 7,000 பேருக்கு நோய் பாதிப்பு



சிக்குன்குனியா என்பது ஏடிஎஸ் கொசுக்களால் பரவும் ஒரு வைரஸ் நோய். டெங்குவை போலவே சிக்குன்குனியாவும் கடும் காய்ச்சல், மூட்டுவலி, உடல் அரிப்பு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இளைஞர்கள், முதியவர்கள், ஏற்கனவே உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களை சிக்குன்குனியா எளிதாக பாதிக்கிறது. இந்நிலையில் சீனாவில் கடந்த சில தினங்களாக சிக்குன்குனியா வேகமாக பரவி வருகிறது. முக்கியமாக சீனாவின் தெற்கு குவாங்டாங் மாகாணத்தில் உள்ள போஷன் உள்ளிட்ட 12 நகரங்களில் நோய்த்தொற்று அதிகரித்து காணப்படுகிறது. நேற்றைய நிலவரப்படி 7,000 பேர் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து கொரோனா பெருந்தொற்று காலத்தில் மேற்கொள்ளப்பட்டதுபோல, சிக்குன்குனியா பாதித்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, குணமடைந்த பின்னரே வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். மேலும் நோய் பாதிப்பு அதிகமுள்ள பகுதிகளில் கிருமி நாசினிகளை தெளித்து கொசுக்களை அழிக்கும் பணியில் சுகாதாரத்துறை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். காய்ச்சல், உடல் வலி உள்ளிட்ட லேசான பாதிப்புகள் இருந்தாலே மருத்துவமனைக்கு சென்று சோதனை செய்து கொள்ளும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து சீன சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ குடியிருப்புகள், வணிக வளாகங்கள் உள்ளிட்ட பகுதிகளை சுற்றி தண்ணீர் தேங்காமல் அப்புறப்படுத்த வேண்டும். மீறினால் ரூ.1 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்” என எச்சரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

## காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் 135 பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு



காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் 135 பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல் தாக்குதலில் 135 பேர் இறந்ததாகவும் 771 பேர் காயமடைந்ததாகவும் காசா சுகாதார அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது. காசாவில் பட்டினியால் நேற்று ஒரேநாளில் 5 பேர் இறந்த நிலையில் பலி எண்ணிக்கை 193-ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## ரஷ்யாவிடம் இருந்து உரங்கள், ரசாயனங்களை அமெரிக்கா வாங்குவது பற்றி எனக்கு எதுவும் தெரியாது: அடித்து சொல்லும் அதிபர் டிரம்ப்


ரஷ்யாவிடமிருந்து உரங்கள், ரசாயனங்களை அமெரிக்கா வாங்குவது பற்றி எனக்கு எதுவுமே தெரியாது என அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறி உள்ளார். அமெரிக்க அதிபர் டிரம்ப் ஏற்கனவே இந்திய பொருள்களுக்கு 25% கூடுதல் வரி விதிக்கப்படும் என கடந்த வாரம் தெரிவித்த நிலையில், இருதினங்களுக்கு முன் 25% வரியை மேலும் உயர்த்த முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார். மேலும் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா மீது அபராதம் விதிக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து ஒன்றிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், “உக்ரைன் ரஷ்யா இடையே போர் தொடங்கிய பிறகு, உலக சந்தை நிலவரத்தால் ஏற்பட்ட கட்டாயத்தின் பேரிலேயே ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணையை இறக்குமதி செய்கிறது. இந்தியாவை குறை சொல்லும் நாடுகளே அத்தியாவசிய தேவையின்றியும் ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்கின்றன. அதன்படி எரிசக்தி மட்டுமின்றி, உரங்கள், ரசாயனங்கள், சுரங்க பொருள்கள், இரும்புதாது, எஃகு மற்றும் இயந்திரங்களை ரஷ்யாவிடமிருந்து ஐரோப்பிய நாடுகள் வாங்குகிறன்றன.



அமெரிக்காவும் தன் அணுசக்தி தொழிலுக்காக யுரேனியம் ஹெக்ஸாபுளோரைடு, மின்சார வாகனத் தொழிலுக்கான பல்லேடியம், உரங்கள் மற்றும் ரசாயனங்களை ரஷ்யாவிடம் இருந்து தொடர்ந்து இறக்குமதி செய்கிறது’ என பதிலடி கொடுத்திருந்தது. இந்தியாவின் குற்றச்சாட்டுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் பதிலளித்துள்ளார். வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த டிரம்ப், “ரஷ்யாவிடம் இருந்து அமெரிக்கா யுரேனியம் ஹெக்ஸாபுளோரைடு, மின்சார வாகனத் தொழிலுக்கான பல்லேடியம், உரங்கள் மற்றும் ரசாயனங்களை இறக்குமதி செய்வது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இதைப்பற்றி ஆய்வு செய்து விட்டு பின்னர் பதில் சொல்கிறேன்” என கூறினார். (ஐ)





## விமானத்தில் புகை: பயணிகள் பீதி

ஸ்பெயினின் மாட்ரிட் நகரில் இருந்து பாரீஸ் புறப்பட்ட விமானத்தின் உள்ளே புகை மூண்டதால் பயணிகள் பீதி அடைந்தனர். விமானத்துக்குள் புகை சூழ்ந்ததை அடுத்து பயணிகள் அனைவரும் ஆக்சிஜன் மாஸ்க் அணிந்து சுவாசித்தனர். விமானத்தின் முன் பகுதியில் பறவை ஒன்று மோதியதால் விமானத்தில் ஓட்டை விழுந்ததுடன் புகை எழுந்தது. புகை சூழ்ந்ததை அடுத்து மீண்டும் மாட்ரிக் திரும்பிய விமானத்தில் இருந்து பயணிகள் கீழே இறக்கப்பட்டனர். (ஐ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறைக்க வேண்டும்." - என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மஹிந்தவுக்கு பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் கூறுகின்றனர். ஆனால், அவருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கூட மிகவும் அதிகம் என்றே நான் கூறுவேன். பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கத் தலைமைத்துவம் வழங்கினார் என்பதற்காக மஹிந்த மீது புலிகள் ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை. தாக்குதல் நடத்துவதற்கு முயற்சியும் எடுக்கவில்லை. புலிகளின் கொலைப்பட்டியலில்கூட மஹிந்தவின் பெயர் இருக்கவில்லை.

புலிகள் என் மீதே தாக்குதல் நடத்தினார்கள். போர் தொடங்கும் முன்பே என் மீது தாக்குதல் நடத்தினர். மஹிந்த வைத்திருந்த பாதுகாப்பு பிரிவில் அரைவாசிப் பேர் மனைவி கடைக்குச் செல்லும்போது பாதுகாப்பு வழங்குவதற்கும், பிள்ளைகள் விளையாடுவதற்கு பாதுகாப்பு வழங்குவதற்குமே பயன்படுத்தப்பட்டனர். இது வெறும் பகட்டு. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாமல் எதற்கு மஹிந்தவுக்கு இத்தனை பாதுகாப்பு.

நன்கு பயிற்சி வழங்கப்பட்ட 30 பேர் மஹிந்தவின் பாதுகாப்புக்குப் போதும். நான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தால், 30 பேரைத்தான் பாதுகாப்புக்கு வழங்குவேன். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அமைச்சர்களுக்கு பாதுகாப்பில்லை. அவர்கள் மக்களோடு மக்களாக திரிகிறார்கள். அப்படியொரு நிலைமை எமது நாட்டிலும் வர வேண்டும்." - என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்த நபர் மீதே யானை தாக்கியுள்ளது.

சம்பவத்தில் கிடாப்பிடிச்சகுளம், நட்டாங்கண்டலை வதிவிடமாகக் கொண்ட சண்முகராசா உதயராசா என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

## குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலு மருதமுத்து (வயது 55) என்ற குடும்பஸ்தர் நேற்றுக் காலை 10.57 மணியளவில் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றார் என்றும், இன்னும் வீடு திரும்பவில்லை என்றும் அவரது மகன் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றை பதிவு செய்து உள்ளார்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸார் மற்றும் மவுஸ்சாகலை நீர்த்தேக்கத்தில் மீன் பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் மற்றும் புரவுன்லோ தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று காலை தேடும்பணியில் ஈடுபட்டு வந்தவர்கள் மவுஸ்சாகலை நீர்த்தேக்கத்தின் புரவுன்லோ கரையோரப் பகுதியில் காணாமல்போன வேலு மருதமுத்து உடுத்தி இருந்த உடை, பாதணி என்பவற்றைக் கண்டு நீர்த்தேக்கத்தில் தேடும் பணியில் மீனவர்கள் மற்றும் புரவுன்லோ தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது வரை கண்டுபிடிக்க முடியவில்லை என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# தமிழ் எம்.பிக்கள், ஜனாதிபதி இடையே அவசர சந்திப்பு!

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கா தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்றையதினம் சந்திக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரின் எழுத்து மூலமான அவசர வேண்டுகோளின் பெயரில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்படும் காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

குறித்த விவகாரம் தொடர்பில் ஆராயவே இந்த அவசர சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி இன்று பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பிற்கு கடிதத்தில் ஒப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கடிதத்தில் ஒப்பமிடாத வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களும் மற்றும் மன்னார் காற்றாலையுடன் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். செம்மணியில் மீட்கப்பட்ட சிசுவின் எலும்பு கூட்டு தொகுதி!

யாழ். செம்மணி அகழ்வாய்வு மையத்தில் இடம்பெற்ற ஸ்கான் பரிசோதனைகள் தொடர்பான இறுதி அறிக்கை எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். செம்மணி பகுதியில் அகழ்வாய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அங்கு மேலதிகமாக புதைகுழிகள் இருக்கின்றனவா என்று அறிவதற்காக தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் (ஜி. பி. ஆர்.) ஸ்கான் செய்யும் நடவடிக்கைகள் இரண்டு தினங்கள் நடைபெற்றன.

குறித்த பணிகள் கடந்த செவ்வாய்கிழமையுடன் (05) முடிவுக்கு வந்துள்ள நிலையில் இது தொடர்பான அறிக்கைகள் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றைய தினம் செம்மணி மனித புதைகுழியில் இருந்து சிசு ஒன்றின் எலும்பு கூட்டு தொகுதி யாழ். நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். செம்மணியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 41 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் சிறுவர்கள், சிசுக்கள் உள்ளிட்ட 147 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இதுவரை 133 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 16 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் பகுதி அகழ்வு பணிகள் இன்றைய தினம் (07) தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, எதிர்வரும் 21ஆம் திகதியளவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்பு சலுகைகளை ரத்து செய்வதற்கான சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்பு சலுகைகளை ரத்து செய்வதற்கான சட்டமூலம் இன்றைய நாடாளுமன்ற அமர்வின் போது நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனுபவித்து வரும் சிறப்பு சலுகைகளை ரத்து செய்வதற்காக, 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதி உரிமைச் சட்டத்தை ரத்து செய்வதற்கான தொடர்புடைய சட்டமூலம் அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகள் ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலத்தின்படி, முன்னாள் ஜனாதிபதி அல்லது மனைவிக்கு வழங்கப்படும் எந்தவொரு வீடு, மாதாந்திர கொடுப்பனவு, மாதாந்திர செயலக கொடுப்பனவு, போக்குவரத்து, பிற வசதிகள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியமும் ரத்து செய்யப்பட உள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளை ரத்து செய்யும் வகையில், ஜனாதிபதியின் உரிமைகள் சட்டத்தை ரத்து செய்வதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானம்!

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளது.

மருத்துவ சேவை மற்றும் துறையில் உள்ள பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டியுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை காரணமாக ஏராளமான கிராமப்புற மற்றும் மாவட்ட வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாகவும், பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவது சவாலாக மாறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்த வேலைநிறுத்தம் எதிர்வரும் திங்கள்கிழமை (11) காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அவசர சிகிச்சை சேவைகளை முன்னெடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் நாளாந்த வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்றும், இதுபோன்ற சூழ்நிலைகளில் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பானது ஒரு சட்டவிரோத செயல்முறையின் நேரடி விளைவாகும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மருத்துவ தொழிற்சங்கங்கள் கடுமையான நடவடிக்கையை எடுக்கத் தயாராக உள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சமமான தரமான சுகாதார சேவைகள் இல்லாமையால், வைத்தியர்களை நியமிப்பதில் பெரும் சிக்கல் எழுந்துள்ளன.

# வலிந்து காணமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நினைவு நாளும், முன்னெடுக்கப்படவுள்ள போராட்டமும்!

சர்வதேச வலிந்து காணமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நினைவு நாளான ஒகஸ்ட் 30ஆம் திகதியன்று நீதிகோரி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு காணமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரும் சங்கத்தின் செயலாளரும், குறித்த அமைப்பின் வவுனியா மாவட்டத்தின் தலைவியுமான சிவானந்தன் ஜெனிதா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சர்வதேச வலிந்து காணமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நினைவு நாளான ஒகஸ்ட் 30 ஆம் திகதியன்று முன்னெடுக்கப்படவுள்ள நீதிக்கான போராட்டத்திற்கு வேற்றுமைகள் இன்றி ஒருமித்த குரலாக ஓங்கி ஒலிக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

குறித்த நாளன்று வடமாகாணத்தில் - யாழ்ப்பாணத்திலும், கிழக்கு மாகாணத்தில் - மட்டக்களப்பிலும் மாபெரும் கவனயீர்ப்பு பேரணியை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியாக போராடிவருகின்றோம்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு முன்னரும், அதன் பின்னரும் சிறுவர்கள், பெண்கள் உட்பட பலர் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

செம்மணி மனித புதைகுழி உட்பட பல மனித புதைக்குழிகளும், சித்திரவதை முகாம்களும் இனப்படுகொலைக்கான முக்கிய ஆதாரங்களாக எம் கண் முன் நிலைத்து நிற்கின்றது. இவை அனைத்தும் சர்வதேச விசாரணை ஒன்றின் கீழ் முறையாக விரைந்து விசாரிக்கப்பட வேண்டும். அத்துடன் சர்வதேச நீதி விசாரணை காலதாமதமின்றி நடத்தப்படவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் பெற வேண்டிய உண்மையான நீதியும், அவர்களது பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் அனைத்து நாடுகளும் ஒருமித்து இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு மனித உரிமைகளை பேணும் அனைத்து நாடுகளிடமும் கோருகின்றோம்.

செம்மணி மனித புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்படும் உடல்கள் தொடர்பான சர்வதேச விசாரனை வேண்டும் என நாம் கோரும் அதேவேளை, உள்ளக விசாரணையை திணிக்கும் தலைவரைக் கண்டித்தும் பாரிய கண்டன பேரணியினை எதிர்வரும் 30ஆம் திகதி நடத்த திட்டமிட்டுள்ளோம்.

எனவே இப்பேரணியில் மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள், தொழிலாளர் சங்கங்கள், கிராமிய அமைப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவருரையும் இணையுமாறு அழைப்பு விடுப்பதாக சிவானந்தன் ஜெனிதா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2025 வெளியிடப்பெற்றது.